பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

28 05 2025 **WEDNESDAY** 7 15 **AM**

ஆகாஷவாணி - <u>செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தீவிரவாதம் எந்தவடிவில் இருந்தாலும், அது மனிதகுலத்திற்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக உள்ளது என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கூறியுள்ளார்.

2. நாட்டின் பருத்தி உற்பத்தி மற்றும் அதன் தரத்தை உயர்த்த வேண்டியது அவசியம் என்று மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் வலியுறுத்தியுள்ளார்

3. நிதி தொழில்நுட்ப நிறுவனங்கள் டிஜிட்டல் பொது கட்டமைப்பை மேம்படுத்த பேருதவியாக உள்ளது என்று மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

4. இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் செல்லும் விமானங்களுக்கான தடை அடுத்த மாதம் 19ஆம் தேதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக ஏர் இண்டியா நிறுவனம் அறிவித்துள்ளது.

5. யுக்ரைன் விவகாரத்தில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் நெருப்புடன் விளையாடுவதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் குற்றம் சாட்டியுள்ளார்.

>>>>>>>>><<<<<<<<<

தீவிரவாதம் எந்தவடிவில் இருந்தாலும், அது மனிதகுலத்திற்கும் நாகரிகத்திற்கும் மிகப் பெரிய அச்சுறுத்தலாக உள்ளது என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கூறியுள்ளார்.

புதுதில்லியில் தம்மை சந்தித்த இலங்கை நாடாளுமன்ற தூதுக் குழுவினரிடையே பேசிய அவர், தீவிரவாத்திற்கு எதிரான நடவடிக்கையில் அனைத்து நாடுகளும் ஓரணியில் திரண்டு, பொதுவான செயல் திட்டத்துடன் பணியாற்றுவது அவசியம் என்று வலியுறுத்தினார்.

தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைகக்கு ஆதரவு தெரிவித்ததற்காக, இலங்கை தூதுக் குழுவினருக்கு அவர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இந்தியா - இலங்கை இடையேயான நட்புறவு, கலாச்சாரம், ஆன்மிகம் மற்றும் நாகரிகத்தின் அடிப்படையில் அமைந்தது என்று குறிப்பிட்ட திரு. ஓம் பிர்லா, புத்தமத தலங்கள் இருநாடுகளையும் ஒன்றிணைப்பதாகவும் தெரிவித்தார்.

>>>>>>>>><<<<<<<<<

ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து, உலக நாடுகளிடம் எடுத்துரைப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய தூதுக்குழுவில் பிஜேபியின் திரு. பைஜெயந்த் பாண்டா தலைமையிலான குழுவினர் குவைத்தில் அந்நாட்டு துணைப் பிரதமர் திரு. ஷெரிதா அப்துல்லா ஷாத் அல் மவ்ஷெர்ஜி மற்றும் அமைச்சர்களை சந்தித்து தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டை எடுத்துரைத்தனர்.

அப்போது, தீவிரவாதத்தை அனைத்து வகையிலும் எதிர்த்து போராட இருநாடுகளும் ஒப்புக் கொண்டனர்.

குவைத் பயணத்தை முடித்துக் கொண்டு அடுத்த கட்டமாக இந்த குழுவினர் பஹ்ரைன் சென்றுள்ளனர்.

இதேபோன்று பிஜேபியைச் சேர்ந்த திரு. ரவிசங்கர் பிரசாத் தலைமையிலான குழுவினர் பாரிஸ் நகரில் அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இந்தியா — பிரான்ஸ் நட்புறவு அமைப்பினரை சந்தித்து ஆப்பரேஷன் சிந்தூர் குறித்து எடுத்துரைத்தனர்.

அப்போது தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக பிரான்சும் குரல் கொடுக்கும் என்று அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உறுதியளித்தனர்.

இதேபோன்று திமுக உறுப்பினர் திருமதி. கனிமொழி தலைமையிலான குழுவினர் கிரீஸ் நாட்டிற்கு சென்றுள்ளனர்.

அங்கு அந்நாட்டின் உயரதிகாரிகளை சந்தித்த இந்தியக் குழுவினர் எல்லை தாண்டிய தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கை குறித்து எடுத்துரைத்தனர்.

காங்கிரஸ் கட்சியின் திரு. சசிதரூர் தலைமையிலான குழுவினர் கயானா பயணத்தை முடித்துக் கொண்டு பனாமா சென்றுள்ளனர்.

>>>>>>>>><<<<<<<<<

நாட்டின் பருத்தி உற்பத்தி மற்றும் அதன் தரத்தை உயர்த்த வேண்டியது அவசியம் என்று மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று பருத்தி மற்றும் செயற்கை நூல்இழை தொடர்பான ஆலோசனைக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய அவர், உற்பத்தியை அதிகரிப்பதற்கு புதிய நடைமுறைகள் மற்றும் ஒத்துழைப்புகளை மேம்படுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

ஜவுளி தொடர்பான மதிப்புச் சங்கிலியின் பலன் அனைத்து மட்டங்களுக்கும் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஜவுளித் தொழில் தேவை மற்றும் விநியோகத்தில் நிலவும் இடைவெளியை சரிசெய்ய, சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திரு. கிரிராஜ் சிங் தெரிவித்தார்.

>>>>>>>>><<<<<<<<<

நிதி தொழில்நுட்ப நிறுவனங்கள் நாட்டின் டிஜிட்டல் பொது கட்டமைப்பை மேம்படுத்த பேருதவியாக உள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

உத்தரபிரதேச மாநிலம், நொய்டாவில் உள்ள நிதி தொழில்நுட்ப நிறுவனத்தை பார்வையிட்ட அவர், அதன் நிர்வாகிகள் மற்றும் ஊழியர்களுடன் கலந்துரையாடினார்.

அப்போது பேசிய அவர், இந்த நிறுவனங்கள் வியாபாரிகள் மற்றும் சிறு குறு நடுத்தர தொழில்துறையினருக்கு தடையற்ற மற்றும் பாதுகாப்பான சேவைகளை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் செயல்படுவதாக குறிப்பிட்டார்.

>>>>>>>>><<<<<<<<<

ஒருங்கிணைந்த சுகாதார கட்டமைப்பை உருவாக்குவதில் பாரம்பரிய மருத்துவத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

ஜெனிவாவில் நடைபெற்ற உலக சுகாதார சபைக் கூட்டத்தில் இந்தியா சார்பில் பங்கேற்ற ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி திரு. அரிந்தம் பக்ஷி இக்கருத்தை தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அடுத்த 10 ஆண்டுகளுக்கான உலக பாரம்பரிய மருத்துவ யுக்தியை இந்தியா வரவேற்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

பாரம்பரிய மருத்துவத்தை மேம்படுத்தும் உலக சுகாதார அமைப்பின் முயற்சிகளுக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவு அளிக்கும் என்று திரு. அரிந்தம் பக்ஷி தெரிவித்துள்ளார்.

>>>>>>>>><<<<<<<<<

இனி . . .

ஆபரேஷன் சிந்தூரின் வெற்றியைக் கொண்டாடும் வகையில், சாதனை படைத்த பாதுகாப்புப் படையினரின் சிறப்பைப் போற்றும் வகையிலான செய்தித் தொகுப்பு...

**(Sound Byte – Music – 12 Sec)**

இதில் இன்று இடம்பெறுகிறது பரம்வீர் சக்ரா விருது பெற்ற சுபேதார் ஜொஹிந்தர் சிங் குறித்த வீரதீர சாதனைகள் . . .

**(Voice Over / Closing Music – 100 Sec)**

**>>>>>>>>><<<<<<<<**

இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் செல்லும் விமானங்களுக்கான தடை அடுத்த மாதம் 19ஆம் தேதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக ஏர் இண்டியா நிறுவனம் அறிவித்துள்ளது.

ஹவுதி கிளர்ச்சியாளர்கள் டெல் அவிவ் விமான நிலையத்தில் கடந்த 4ஆம் தேதி நடத்திய தாக்குதல் காரணமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

**>>>>>>>>><<<<<<<<**

பராகுவே அதிபர் திரு. **Santiago Pena Palacios** மூன்று நாள் அரசு முறைப் பயணமாக வரும் 2ஆம் தேதி புதுதில்லி வருகிறார்.

அந்நாட்டு அமைச்சர்கள், அதிகாரிகள் மற்றும் தொழில்துறையினர் அடங்கிய உயர்மட்டக் குழுவிற்கு தலைமையேற்று வரும் பராகுவே அதிபர், இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

தமது இந்தப் பயணத்தின் போது, மும்பையிலும் பல்வேறு தலைவர்கள் மற்றும் தொழில்துறையினரையும் பராகுவே அதிபர் சந்திக்கவுள்ளதாக வெளியுறவு அமைச்சக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>>>>>><<<<<<<<**

யுக்ரைன் விவகாரத்தில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் நெருப்புடன் விளையாடுவதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் குற்றம் சாட்டியுள்ளார்.

வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த அவர், போர்நிறுத்த பேச்சுவார்த்தைகளை ரஷ்ய அதிபர் நிராகரித்திருப்பது சரியல்ல என்று கூறினார்.

யுக்ரைனில் ரஷ்யா மீண்டும் தாக்குதல் நடத்துவதற்கும் திரு. டொனால்டு ட்ரம்ப் கண்டனம் தெரிவித்துள்ளார்.

>>>>>>>>><<<<<<<<

மஹாராஷ்ட்ர மாநிலத்தில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில், மழை வெள்ள பாதிப்புகளை எதிர்கொள்ள தேசிய பேரிடர் மீட்புப் படையினர் தயார் நிலையில் உள்ளனர்.

23 வீரர்கள் அடங்கிய குழுவினர், ராய்காட் மற்றும் மஹத் மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீட்பு பணிகளுக்குத் தேவையான ஃபைபர் படகுகள், வயர்லெஸ் தொலைத்தொடர்பு சாதனங்களுடன் தயார்நிலையில் இருப்பதாக மஹத் மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

>>>>>>>>><<<<<<<<

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் லக்னோ அணியை வென்றது.

நேற்று லக்னோவில் நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் பேட் செய்த லக்னோ அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 227 ரன் எடுத்தது.

228 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய பெங்களூரு அணி 18 புள்ளி நான்கு ஓவரில் 4 விக்கெட்டுகளை இழந்து 230 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

நாளை நடைபெறவுள்ள முதல் தகுதிச்சுற்று போட்டியில் பெங்களூரு – பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

**>>>>>>>>><<<<<<<<**

2026ஆம் ஆண்டுக்கான ஆசிய பளுதூக்கும் சாம்பியன்ஷிப் போட்டிகள் இந்தியாவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற ஆசிய பளுதூக்கும் கூட்டமைப்பு கூட்டத்தில், அடுத்த ஆண்டு ஏப்ரல் 1 முதல் 10ஆம் தேதிவரை குஜராத் மாநிலம், அஹமதாபாதில் இப்போட்டிகளை நடத்த முடிவு செய்யப்பட்டது.

**>>>>>>>>><<<<<<<<**

25வது தேசிய சப்ஜூனியர் **Wushu** போட்டிகள் நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு அருகேயுள்ள தோக்கவாடியில் நேற்று தொடங்கியது.

இம்மாதம் 31ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இப்போட்டியில், தில்லி, மத்தியப்பிரதேசம், ஹரியானா, குஜராத், உத்தரபிரதேசம், மேற்குவங்கம் உள்ளிட்ட 23 அணிகள் பங்கேற்கின்றன.

**>>>>>>>>>>END<<<<<<<<<**